## 12.4 அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – 1998–99 – நீதிமன்ற ஆணையின் படி வழிகாட்டி நெறிமுறைகளில் சில திருத்தங்கள்

ஊரக வளர்ச்சி (ஒஊவதி.1) துறை

அரசாணை (நிலை ) எண். 179 நாள் : 27.08.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 113, ஊரக வளர்ச்சி, நாள்–01.06.1998

**ஆணை**

1998–99ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்ட செயலாக்கத்திற்காக பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணையில் பத்தி இரண்டில் ''ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது ஊரக தொகுதியில் ஒவ்வொரு நிதி ஆண்டில் தனது விருப்பப்படி ஒரு கிராம பஞ்சாயத்தை தேர்வு செய்து'' என்று விதி முறை செய்யப்பட்டது.

2. நீதிப்பேராணை எண். 9085/98 மற்றும் நீதிப்பேராணை பலவகை மனுக்களின் எண்கள்.13858 மற்றும் 13859/98 மீது 09.07.1998ல் சென்னை உயர்நீதி மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், விழுப்புரம் மாவட்டம் வானூர் சட்ட மன்றத் தொகுதியில் திருவக்கரை கிராம பஞ்சாயத்தினை 1998–99ம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செய்லபடுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்ட ஆணையினை செல்லுபடியற்றது என விலக்கி ஆணையிட்டதுடன், ஒரு சட்ட மன்ற உறுப்பினர் அரசாணை நிலை எண். 113, ஊரக வளர்ச்சித் துறை, நாள்–01.06.1998ன்படியும், கிராமப் பஞ்சாயத்தினை தன்னிச்சையாக தேர்வு செய்ய முடியாது எனவும், 1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியே இத்தேர்வை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் செய்ய முடியும் என்றும் ஆணையிட்டுள்ளது.

3. பார்வையில் கண்டுள்ள அரசாணையில் பத்தி 9ல் உள்ள கால அட்டவணையில் வரிசை எண். 1–ல் ''1991ம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயலாக்கத்திற்காக மாவட்டங்களுக்கு தனி நபர் வருமான அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக மட்டுமேயன்றி, ஒரு சட்டமன்ற உறுப்பினர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டச் செயலாக்கத்திற்காக, ஒரு கிராமத்தை தேர்வு செய்வதை நேரிடையாக முறைப்படுத்துவதற்காக அல்ல.

4. சென்னை உயர் நீதி மன்றம் முன்பத்தி 2ல் குறிப்பிட்டுள்ளவாறு பிறப்பித்துள்ள ஆணையினை அரசு கவனமாக பரிசீலித்து பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்தங்கள் வெளியிடுகிறது.

அரசாணை நிலை எண். 113, ஊரக வளர்ச்சித் துறை, நாள்–01.06.1998க்கு திருத்தங்கள்

I. அரசாணை நிலை எண். 113, ஊரக வளர்ச்சித் துறை, நாள்–01.06.1998ல் பத்தி 2ல் ''ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது ஊரக தொகுதியில் ஒவ்வொரு நிதி ஆண்டில் தனது விருப்பப்படி ஒரு கிராமப் பஞ்சாயத்தை தேர்வு செய்து'' என்ற சொற்றொடர் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக ''அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திற்கும்'' என்ற சொற்றொடர் சேர்க்கப்பட வேண்டும்.

II. அரசாணை நிலை எண். 113, ஊரக வளர்ச்சித் துறை நாள்–01.06.1998ல் பத்தி எண். 2, 2.1 ஆக மாற்றப்படுகிறது.

III. தற்பொழுது உள் பத்தி 2.1க்கு பிறகு கீழுள்ளது பத்தி 2.2 ஆக சேர்க்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவரது தொகுதியில் கீழ்க்குறிப்பிட்டிருக்கும் அளவுகோல்களில் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதின் அடிப்படையில் கிராம பஞ்சாயத்தை தேர்வு செய்து அவ்வாறு தேர்வு செய்தது எந்த ஒரு அளவுகோலின் அடிப்டையில் செய்யப்பட்டது என்பதை தெளிவாக எழுத்து மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு ஒரு முறை செய்யப்பட்ட தேர்வு இறுதியானதாகும்.

**அளவுகோல்கள்**

அ. அதிகமான மக்கள் தொகை கொண்ட கிராம பஞ்சாயத்து.

ஆ. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லது பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சேர்ந்த அதிக மக்கள் தொகை கொண்ட கிராம பஞ்சாயத்து.

இ. உள்ளமைப்பு வசதிகளில் (சாலைகள், பள்ளிக் கூடங்கள், நல மையங்கள் போன்றவற்றில்) பின் நிலையில் உள்ள கிராம பஞ்சாயத்து.

ஈ. மாநில சராசரியுடன் ஒப்பிடுகையில் எழுத்தறிவில் குறைவான சராசரி உள்ள கிராம பஞ்சாயத்து .

உ. மாவட்ட தலைநகரிலிருந்து நெடுந்தொலைவிலுள்ள கிராம பஞ்சாயத்து மற்றும் அணுக முடியாத இடங்களிலுள்ள கிராம பஞ்சாயத்து.

பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசாணையின் இணைப்பு–1ல் தற்பொழுது “கிராமங்களின் தேர்வு” என்ற தலைப்பின் கீழுள்ள பத்தி 1க்கு பிறகு அரசாணையின் பத்தி எண். 2.2ல் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ள பத்தி போல் இப்பத்தியிலும் சேர்க்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்